## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




### Silent மூடில் தொடரும் முதலமைச்சர்!

# ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்கு மீண்டும் காவி Paint!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, மே.31-

எதையும் கண்டு கொள்ளாமல், அநியாயத்தை தட்டிக் கேட்காமல் முதல்வர் இருப்பதால் ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்கு காவிச்சாயம் பூசியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டித்துள்ளார்.

அவரது கண்டனம் வருமாறு :-

**எப்போதுமே Mute-ல இருக்கவர் முதலமைச்சரா இருக்காருங்கிற தைரியத்துல ஆளுநர் மாளிகையில திருவள்ளுவருக்கு மறுபடியும் காவி Paint அடிச்சு இருக்காங்க.**

**தமிழ்நாடு அரசு ஜனவரி மாசத்துல திருவள்ளுவர் நாளை அதிகாரப்பூர்வமா கொண்டாடுது.**

**ஆனா, வைகாசி அனுஷம் திருவள்ளுவர் நாள்னு புதுசா ஒரு உருட்டு எங்கே இருந்து வந்தது?**

**தி.மு.கழக ஆட்சியில இதே மாதிரி வேலையைப் பார்த்த அப்போதைய ஆளுநரை கடுமையா கண்டிச்சோம்.**






**சங்கிகளை திருத்துனோம்.**

**இப்போ மறுபடியும் தமிழர்களோட சுயமரியாதையை உரசிப்பார்க்குறாங்க.**

**வள்ளுவரை அவமதிக்கும் பாசிஸ்டுகளுக்கும் - அதை அனுமதிக்கும் #SofaModel அரசுக்கும் என்னுடைய கடும் கண்டனங்கள்.**

**தமிழ்த்தாய் வாழ்த்தை முதல்ல பாட permission கொடுங்கன்னு டெல்லியில கேட்ட மாதிரி, இந்த விஷயத்துலயும் முதலமைச்சர் பயந்து நடுங்கக் கூடாது.**

**சட்டம் ஒழுங்கு விஷயத்துல தான் முதலமைச்சர் Silent ஆ இருக்காருன்னா, கொள்கை எதிரிகள் வள்ளுவருக்கு காவி Paint அடிக்கிற அநியாயத்தை தட்டிக் கேட்கவும் தயங்குறது ஏன்?**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டித்துள்ளார்.

# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை நிறுத்தி வைத்தது ஏன்?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை,மே.31-

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை நிறுத்தி வைத்தது ஏன் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

முதல்வராக விஜய் பொறுப்பேற்றவுடன், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்படும் என்று அறிவித்தார். இந்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையில் இடம்பெறும் பெண் போலீஸ் மற்றும் பெண் சப்இன்ஸ்பெக்டர்களுக்கு சிறப்பு சீருடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



சிங்கப்பெண் அதிரடிப்படையின் தொடக்கவிழா முதலில் கடந்த 27ம் தேதி ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் நடக்க இருந்தது. முதல்வர் அன்று டெல்லி சென்றதால், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் தொடக்க விழா தள்ளிவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இத்திட்டத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைப்பதாக இருந்தது. இதற்கான ஏற்பாடுகள் எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்று வந்தது. கடைசி நேரத்தில் தொடக்க விழா திடீரென ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கடலூரில் இளம்பெண் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செய்தி, தூத்துக்குடியில் நண்பர்களுடன் ஏற்பட்ட தகராறில் இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட செய்தி என தமிழ்நாட்டில் அடுத்தடுத்து வேதனை அளிக்கும் குற்றச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

அதிகரித்துவரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளின் தீவிரத்தை உணர்ந்து எப்போது செயல்படப் போகிறது, த.வெ.க. அரசு?. மகளிர் பாதுகாப்புக்காக தொடங்கப்படும் என்று அறிவித்திருந்த ‘சிறப்பு அதிரடிப்படை’ திட்டத்தை நிறுத்திவைத்துள்ளது ஏன்?. தொடரும் இந்த குற்றச் சம்பவங்களை தடுக்க என்ன செய்யப்போகிறது, இந்த அரசு?

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

